BRAMPTON **Service and Information Update**

# ப்ராம்ப்ட்டன் நகரம் பிப்ரவரி 21, 2022 முதல், போகிற போக்கில் பொது மக்களுக்கான கட்டிடங்களுக்குள் பொதுமக்கள் செல்ல அனுமதிக்கவிருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 9, 2022) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது பிப்ரவரி 21, 2022 திங்கட்கிழமை முதல் தனது பொதுமக்களுக்கான கட்டிடங்களில் பொதுமக்கள் நேரில் வருவதை பாதுகாப்புடன் அனுமதிப்பதற்காக தயார்ப்படுத்தி வருகிறது.

**நகர சேவைகள் மற்றும் கட்டிடங்கள்**

<u>நகர் மன்றத்தில் போகிற போக்கில் நேரில் பெறுவதற்கான சேவைகள்</u>

நகரின் சேவைகளை குடியிருப்புவாசிகள் பெறுவதற்காக, நகர் மன்றமானது காலை 8:30 மணி முதல் மாலை 4:30 மணி வரை திறந்திருக்கும். சந்திப்புக்கான முன்பதிவுகள் இனி தேவையில்லை. சந்திப்புகளுக்கான முன் பதிவுகள் இன்னமும் இருந்தாலுமே கூட, போகிறபோக்கில் நேரில் வருவதும் அனுமதிக்கப்படுகிறது. சந்திப்புகளுக்கான முன் பதிவுகளை இங்கு செய்துகொள்ளலாம்

<u>நகர கட்டிடங்களை வாடகைக்கு விடுதல்</u>

பொழுதுபோக்கு மையங்கள் இப்போது முன்பதிவின் பேரில் வாடகைக்கு கிடைக்கின்றன. உங்களுக்கான இடத்தை முன்பதிவு செய்ய அழைக்கவும் 905.874.BOOK (2665).

<u>சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் (Service Brampton)</u>

குடியிருப்புவாசிகள் தங்கள் வசதிப்படி சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் அமைந்துள்ள இடங்களுக்கு சந்திப்புக்கான முன்பதிவு இல்லாமலேயே வருகை தரலாம்; இதன்படி, சேவைகளை வேண்டிக் கொள்ளலாம், பொழுதுபோக்கு முன்பதிவு செய்தல், வாகன நிறுத்த கட்டணம் செலுத்துதல் மற்றும் ரொக்கம் அல்லாத முறையில் வரி செலுத்தல் உள்ளிட்ட பல்வேறு பரிவர்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். இந்த இடங்களில் கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் (Service Brampton) ஐ, ஒரு நாளின் 24 மணி நேரம், வாரத்தின் 7 நாட்களில் அடைவதற்காக நான்கு வழிமுறைகள் உள்ளன:

- ஆன்லைனில் இங்கு வருகை தரவும்: 311Brampton.ca
- ஆப் ஸ்டோர் அல்லது கூகிள் ப்ளேயில் 311 Brampton செயலியை தரவிறக்கம் செய்யவும்

- ப்ராம்ப்ட்டன் நகர எல்லைக்குள்ளாக 311 டயல் செய்யவும் (நகர எல்லைக்கு அப்பால் என்றால் 905.874.2000)
- இங்கு மின்னஞ்சல் செய்யவும்: 311@brampton.ca

வேலை நேரங்கள் மற்றும் அமைவிடங்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca.

**நகர சபை அறைகளுக்கு திரும்பவும் வருதல்**

பிப்ரவரி 21 ஆம் தேதி முதல், நகர சபை உறுப்பினர்கள் அதிகபட்சம் 5 பேர் நேரில் ஆஜராகலாம் மற்றும் ஏனையோர் எட்ட இருந்து பங்கேற்கலாம். காலப்போக்கில் இந்த எண்ணிக்கை அதிகரித்து, அனைத்து 11 உறுப்பினர்களும் கூட்டங்களுக்கு நேரில் கலந்து கொள்ள ஏதுவாகும்.

இந்தச் சமயத்தில், பொதுமக்கள் தொடர்ந்து எட்ட இருந்தே பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பொதுமக்கள் எப்போது நேரில் திரும்பவும் வரலாம் என்பதற்கான மேலும் விபரங்கள் வரவிருக்கும் மாதங்களில் பகிரப்படும்.

**Masksமுகக் கவசங்கள்**

ப்ராம்ப்ட்டன் கோவிட்-19 கட்டாய முக கவசம் அணிதல் சட்டத்தினை, ஏப்ரல்1, 2022 வரை நகர நிர்வாகம் நீட்டித்திருக்கிறது என குடியிருப்புவாசிகளுக்கு நினைவூட்டப்படுகிறது.

கோவிட்-19 கட்டாய முக கவசம் அணிதல் சட்டத்தின் கீழாக, ப்ராம்ப்ட்டனில் உள்ள அனைத்து பொது கட்டிடங்களின் உட்புறத்தில் மருத்துவம் அல்லாத முக கவசம் அணிவது கட்டாயமாகும். கழுத்தில், தலையில் அணியும் எந்தவித துணிகள் அல்லது கதகதப்பாக்கும் கம்பளிகள் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்ட முக கவசங்கள் ஆகமாட்டா. மேலும் இந்தச் சட்டத்தின்படி, உணவு சாப்பிடும்போது அல்லது பானம் அருந்தும்போது, அதற்கான உரிய இடத்தில் அமர்ந்தபடி இருக்கும்போது மட்டுமே முக கவசம் கழற்றப்பட வேண்டும்.

நகரவாசிகள், உடல்ரீதியாக இடைவெளி விட்டபடி, நல்ல சுகாதார பழக்கங்களைக் கடைப்பிடித்தபடி மற்றும் முக கவசங்களை அணிந்தபடி, தொற்று பரவாமல் தடுக்க, தொடர்ந்து தங்கள் பங்களிப்பை செய்து வருவதற்காக, நகர நிர்வாகம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது

**லின்குகள்**

- ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 திட்ட நிகழ்ச்சிகள் மற்றும் சேவை பற்றிய புது தகவல்கள் ( City of Brampton COVID-19 programming and service updates_
- கோவிட்-19 இன் சமயத்தில் வணிக இடங்கள் மற்றும் பணியிடங்களை பாதுகாப்பாக வைத்தல் (Keeping businesses and workplaces safe during COVID-19)
- மேம்படுத்தப்பட்ட கோவிட்-19 தடுப்பூசி செலுத்தியதற்கான QR குறியீடு கொண்ட சான்றிதழ் மற்றும் வெரிஃபை ஒன்ட்டாரியோ செயலி (Enhanced COVID-19 Vaccine Certificate with QR Code and Verify Ontario App)
- கோவிட்-19 தொற்றிலிருந்து உங்களையும் மற்றவர்களையும் காத்தல் (COVID-19 Protecting yourself and others)
- கோவிட்-19 தடுப்பூசிகள் (COVID-19 vaccines)

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca